வேலைக்காரி

ஜுபிடர் பிக்சர்ஸ் தயாரிப்பு

விலை 1/2 அணா

வேலைக்காரி

வேதாசல முதலியார், அந்த கிராமத்திலே பெரிய முதலாளி. எராளமான சொத்து - எல்லாம் எழைகளை கசக்கிப் பிழிந்து சேகரித்தது. வேதாசலத்திற்கு இரண்டு மக்கள்......சரசா - அப்பனைப் போல் பணத்திமிர் கொண்டவள், அகம்பாவி...மூர்த்தி - படித்து, முற்போக்கு எண்ணங்களுடையவன், ஆனால் அப்பாவி.

வேதாசலத்தின் பணத்தாசையால் அவதிப்பட்ட எழைகளில் அந்தவூர் சுந்தரம் பிள்ளையும் ஒருவர்...சுந்தரம் பிள்ளைக்கு ஒருமகன் - ஆனந்தன். படித்துப் பட்டம் பெற்று வேலை கிடைக்காததினால் சிலோன் தேயிலைக் காட்டிற்கு பிழைக்கப் போனவன். இலங்கையில் இரவு பகலாக எலும்பொடிய உழைத்து, தினமும் ஒருவேளையே சாப்பிட்டு 200 ரூபாய்கள் மீத்தி அப்பாவுக்கு ஒரு கடை கண்ணிவைத்துக் கொடுக்க வேணுமென்ற ஆவலோடு சொந்த கிராமம் திரும்பினான். ஆவலோடு வந்தவன், அப்பா மரக்கிளையிலே பிணமாகத் தொங்கக் கண்டான். கடன் வசூல் செய்ய வந்த வேதாசலம் தன் தகப்பனை மானம் போகும்படி பேசியதின் விளைவே அவர் தூக்கிட்டு சாகக் காரணமென்று தெரிந்ததும் பழிக்குப்பழி வாங்குவதென்று பயங்கரமான சபதம் செய்கிறான், ஆனந்தன்.

பழிவாங்க எண்ணங்கொண்ட ஆனந்தன், அன்று முதல் கத்தியும் கையுமாகத்திரிந்தான். ஆனால் அவனுடைய நண்பன் மணி - "வேதாசலத்தை வஞ்சம்தீர்க்க நினைக்கிறாய் - அதை கத்தியால் சாதிக்க முடியாது" என்று ஆனந்தனிடம் சொல்லி அவன் மனதை மாற்றி விடுகிறான்...காளியை இடைவிடாது பூஜித்தால், கபடன் வேதாசலத்திற்கு அவள் கட்டாயம் நல்ல பாடம் கற்பிப்பாள் என்று நம்பி அன்று முதல், பல கஷ்டங்கள் அனுபவித்து தேடி வந்த காசை யெல்லாம் காளிக்கு செலவிட்டான்.

வேதாசலத்தின் வீட்டில், அமிர்தம் என்றொரு வேலைக்காரப் பெண்...வேதாசலத்தின் தலைமைக்குடியானவன் முருகேசனின் மகள்...படித்து, பணம் படைத்து, வேற்று ஜாதியை சேர்ந்தவனா யிருந்தும், மூர்த்திக்கு வேலைக்காரி அமிர்தத்தின் மேல் ஒரு

அலாதிப் பிரியம்... அமிர்தத்திற்குக்கூட மூர்த்தியின் மேல் ஆசை தான்... ஆனால் அகம்பாவம் பிடித்த, பணத்திமிர்கொண்ட அக்காள் சரசா அவர்களுக்கிடையே ஒருவிஷவேலியாக இருந்தாள்... அப்பன் முருகேசன், அமிர்தத்தை ஒரு கிழமாப்பிள்ளைக்கு பலியிட இருந்தான். நல்ல வேளையாக, மூர்த்தியின் தந்திரமொன்றினால் அது தடைபட்டது... அதிலிருந்து இருவரின் அன்பும் அதிகரித்தது என்பதில் அதிசயமில்லை.

ஆனந்தன் காளியிடம் வேண்டிவந்ததுபோல் வேதாசலத்திற்கு அவள் படிப்பினையாக ஒன்றும் செய்யவில்லை... அதற்கு மாறாக அவனுக்கு செல்வங்கள் அதிகமாக பெருகிற்று. கடைசியாக, ஒரு ஜமீனும் கிடைத்தது வேதாசலத்திற்கு... அந்த சந்தர்ப்பத்தில், ஊரை ஏமாற்றுவதற்காக அவன் காளி கோயிலில் ஆடம்பரமான அபிஷேகம் ஒன்று நடத்த - அதைக் கேள்வியுற்ற ஆனந்தன், தனக்குக் கிடைக்காத காளியின் அருள், தன் விரோதிக்குக் கிடைத்ததென்ற எண்ணத்தில், காளிகோயிலில் தன்னை மறந்து நெஞ்சு நோக பேசி, வெறிப்பிடித்தவன்போல் நடந்து கொள்ளுகிறான்... அவனை விரட்டிக்கொண்டு சிலர்வர, தப்பித்துக் கொள்வதற்காக ஓடுகிறான்... குறுக்கே நண்பன் மணியை சந்திக்க, மறைவிடம் ஒன்று அவன் காட்டுகிறான்.

மறைந்த இடத்திலே, பெரிய மூட்டை ஒன்றிருந்தது ...ஆனந்தனும் மணியும் அதைப்பிரித்துப்பார்க்க உள்ளே இருந்தது ஒரு பிணம்...மாண்டு போனவனின் முகத்தோற்றம், அசல் ஆனந்தனுடையதுபோலவே இருந்தது. பிணத்துடனிருந்த ஒரு டையரியை பரிசோதித்துப்பார்க்கையில், இறந்து போனவனின் சரித்திரம் அதில் இருந்தது - பக்கத்தூர், மேவார் விலாசம் என்ற செல்வாக்கான இடமொன்று. அங்கு பணக்கார கிழவி ஒருவள்... அவளுடைய ஒரே புதல்வன் மாண்டுபோன பரமானந்தன்... மணியின் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்தது... ஆனந்தன், மேவார் விலாச பரமானந்தனாக நடிப்பது என்று திட்டம் வகுத்தான்.

அடுத்தபடியாக பணக்கார பரமானந்தனான ஆனந்தனை வேதாசலத்தின் மருமகனாக்கினான் மணி. உடனே "பழி தீர்க்கும் வழி" என்றொரு திட்டம் தீட்டப்பட்டது... மருமகனின் அட்டகாச வேலைகள் ஆரம்பமாகிவிட்டன.

பலவகைகளில் வேதாசலத்தின் பணத்தைப் பாழாக்கினான். "குடியன் வெறியன், கூத்திக்கள்ளன்" என்று ஊர்மக்கள் அவனைப் பற்றி பேசுமளவிற்கு நடிப்புகள் செய்தான். இந்த - "பட்ட

தொழிலாளி பாட்டில் வந்த சுகமே
நல்ல சுகமே - கொண்டு
துயர் நீங்கி வாழுதிந்த ஜெகமே
அழகான வீடானது ஆசாரியாலே
ஒட்டெ (ஆசாரி)
கோயில்
குளமானதுங்கூட நம்ம கூட்டத்தினாலே
நம்ம (கூட்)
ஆலையிலே நூலாடை நெய்வோன் மிக
அன்பான தொழிலாளி செய்யும்
வேலையினால் சுக வாழ்வை நடத்துவோன்
மேம்பாட்டு முதலாளி
மெனுக்கு (மே)

ராகம் - ஆனந்தபைரவி தாளம் : ஆதி

உலகத்திலே உன்னதமாய்
உயர்ந்த நாகரீகம்
உபயோகக்காற்று மேகம் மிக
உத்தமராம் தொழிலாளர்
உழைப்பில் வந்ததாகும்
நிலவு சுடர் நெருப்புத் தேவர்
பலரும் வேலைக்காரர் - பயிர்
பண்ணும் நேர்மையாளர் - தலை
நெத்திவேர்வை நிலத்தில் வீழ
நித்தம் பாடுபட்டதோழர் (உல)

மாதர் சங்கம் நடனம் - ராகமாலிகை

ராகம் - சிந்துபைரவி தாளம் : ஆதி

வாழ்விலே சுகம மருவு சீரெலாம்
வளர்வது பெண்ணாலே-மனித(வா)

தாழ்விலாத இகதர்மம் சிறந்ததும்
சற்குணி தன்னாலே (வா)
ஆவதும் பெண்ணாலே - ஏதும்
அழிவதும் பெண்ணாலே - மிக
ஆவல் மேவிய தேவையாவையும்
அன்பு கொண்ட பெண்ணாலே (வா)

ராகம் : அமிர்கல்யாண் தாளம் : இஸ்ரம்

வீசிவிட்டா வெளஞ்ச நெல்லில்
ராசி குவியுமே - பாளை
தூசி பிரியுமே
வேலை செய்த எல்லாருக்கும்
விசனங்குறையுமே
மேதினிமேல் மேன்மையெலாம்
பெண்களாலே
காதலெனும் ஜோதி இன்பக்
கனிகளாலே

ராகம் : அமிர்கல்யாண் தாளம் : ஏகம்

அணுப்போலே புகைபோலே - பஞ்சு
ஆகணும் மேகம்போலே - பஞ்சு (அணு)
அணைக்கும் இருகையாலே
அடிப்போம் வில்லதனாலே
அரிவையர் நம் செயலாலே - பஞ்சு
(அணு)

ராகம் : திலன் தாளம் - ஆதி

நாட்டின் பெருமை நங்கையராலே
நலமோங்கும் தொழிலாலே
செந்தமிழ் (நாட்)

ராட்டினத்தாலே மூதாட்டியர் போலே
பாட்டினிலே செய்வோம் நூலே
செந்தமிழ் (நாட்)

ராகம் : சாருகேஸி தாளம் - திஸ்ரம்

நோயற்ற வாழ்வே - ஆம்
குறைவற்ற செல்வம் - என்றும் (நோ)

காயம் நன்மைகாணும் தர்ம
பரிகாரம் செய்குவோம்
கனிவான மொழிபேசி
பிணி தீர்ப்போமே
அனுதினம் (நோ)

ராகம் : தேஷ் தாளம் - ஆதி

அன்பு நிலந்தனிலே இன்ப
ஆனந்தமாகிய நீர் பாய்ந்து
அம்புவிமேல் அவதாரம் கொண்டாய்
அமுதே தாலேலோ தாலேலோ

ராகம் : தேஷ் தாளம் - கண்டம்

பணி செய்வதேமாதர் கடமை கொண்ட
மணவாளரின் அருமை பெருமை கண்டு
(பணி)

குணமாக அன்பு குறையாமல்
துணைசெய்வேனென் ஸ்வாமிக்கடிமை
நான் (துணை

அணியாடை அலங்காரம்
அணையின் சிங்காரம்
இனிதான ஆகாரம்
இதமாக உபசாரப் (பணி)

ராகம் : தாளம் - ஏகம்

தேசப்பணியே மேலான
தெய்வப்பணி யென்போம்
சித்தம் கொண்டே ரத்தம் சிந்தும்
யுத்தம் செய்குவோம்
க்ஷேமம் தந்திடவே - வீரச்
சேயர் பெற்றிடுவோம்
தீங்கு தவிர்க்கும் தீரப்பாலை
ஊட்டிவளர்த்திடுவோம்
சித்திரமும் வரைவோம்
கைத்தொழில்
வர்த்தகமும் புரிவோம்
தேர் வேந்தர் போலும்
திசைகள் பரவும் அரசும் சகல
வகையிலும் உயர்வோம்

ஆனந்தன்

ராகம் : ஜோன்புரி — தாளம் - ஆதி

பல்லவி

இன்னமும் பாரா முகம் ஏனம்மா ஏழை
இடர் தவிர்ப்பது பாரம்மா - அம்மா
(இன்னமும்)

அநுபல்லவி

கண்ணில்லையோ உனது காதென்ன செவிடோ
என் குறையை என் நிலையை நீ அறியாயோ
(இன்னமும்)

சரணம்

தாயிருக்கப் பிள்ளை ஏங்கலாமோ-பெற்ற
(தாயிருக்க)

நீ இருக்க நானும் நோகலாமோ - பெற்ற
(தாயிருக்க)

ஆயிரம் கண்தான் உடையவளே
(ஓராயிரம்)

ஆயிமகமாயி பத்ரகாளி உமையானவளே
(இன்னமும் பராமுகம்)

ஆனந்தன்

ராகம் : கௌரிமனோஹரி தாளம் - ஆதி

பல்லவி

நீதானல்லாமல் துணையார் - அம்பா -
(நீதானல்லாமல்)

என் - மாதா பிதாவும் நீயே - அம்பா
(நீதானல்லாமல்)

அநுபல்லவி

ஆதாரமான பொருளே - அன்பின்
(ஆதாரமான பொருளே)

நின - தடிமை அகதிதனை ஆண்டருளே.
(நீதானல்லாமல்)

சரணம்

இரக்கமில்லா செல்வராலே - துன்பம்
எளியவர் கொள்ளாமல் பார் மேலே
கருணை பொழியும் முகிலே - பெரும்
கருணை பொழியும் முகிலே - எனது
கவலை தவிர நிதமும் காப்பவர் யாரினி
(நீதானல்லாமல்)

ஆனந்தன்

ராகம் : பீம்பளாஸ் தாளம் - ஆதி

எப்படி வாழ்வேன் இனிமேல்
இப்புவியின் மீது ஏழையும் நான் அந்தோ
(எப்படி)

பணத்தால் சிறந்தோர் குணமிழந்தோர் -
அற்ப - (பணத்தால்)

பாவிகள் தம்மிடையே ஆளை அடிமை
கொள்வார் பொருள் கொடுத்தே (ஆளை)

ஆஸ்த்தியைத்தான் கொள்வார் - பிறரது
(ஆஸ்த்தியைத்தான்)

உழைப்போர் கூலியை குறைத்திடுவார் -
செல்வம் உடையார் கூற்றினும் கொடியவராம்
(செல்வம்)

காளி கருணை செய்வாள் என நினைந்து (காளி)

கைப்பொருள் இழந்தேனே
காட்டில் விறகொடித்தேன் - பழைய
கஞ்சியின்றி நெஞ்சொடிய கல்லை உடைத்தேன்
மூட்டை பல சுமந்தேன் - நான் (மூட்டை)

என் - முதுகெலும்பு ஒடிய பாடுபட்டேன்
தேடி வந்த காசைக்கொண்டு தீபம் எறித்தேன்
தேனபிஷேகம் பொங்கல் தினம் படைத்தேன்-
(காளி கருணை செய்வாள்)

டிபார்ட்டி : நடனம்

ராகம் : யமன் கல்யாண் தாளம் - ஏகம்

பல்லவி

வாழிய நீடூழி - மெய் - வாழிய நீடூழி
பகுத்தறிவாளன் ஆனந்தன் - சதா -
மனோஹரமாய் - வாழிய நீடூழி

அநுபல்லவி

தோழமையே சூழ்ந்த அன்பும்
சுயநலமில்லாத பண்பும்
தாழ்வு முயர்வும் எண்ணுநீதியில்
மண்மேல் நீதி கொண்டும் - ஸதா
மனோஹரமாய் - வாழிய நீடூழி -

சரணம்

ஏழைக்கினியவனும் வான் மழைபோல்
ஈகையால் இன்பம் செய்வான்
வாழ்வு வரினும் மனித நேர்மைதான்
மாறாதவன் துயர் செய்யான்
(ஏழைக்கினியவனும்)
சீலம் கல்வி நலமே வாய்ந்த - சீரால் ஓங்கி-
மெய் - (வாழிய நீடூழி)
இரு விழிதனிலே புகுந்தான் - என்
இதயவானில் அமர்ந்தான் - இரவியும்
மதிபோல் என்னாளும் - இயல்பொடு
புவிதனில் - ஸதா - மனோஹரமாய் -
மெய் (வாழிய நீடூழி)

நலுங்கு பாடல்

ராகம் : பிருந்தாவனசாரங்கா தாளம் - தே

லாலீ லாலீ லாலீ லாலீ - சுப
லாலீ லாலீ - மண
மாலை குலாவிடும் மாப்பிள்ளை பொண்
ணுக்கு (லாலீ லா

தாலியணிந்த சரஸாம் கனியாம்
தையலெனும் திருமாதுக்கும்
சந்தோஷம் பெறும் ஆனந்தர்க்கும் -
தம்பதிகள் சுக வாழ்விற்கும் -

(லாலீ லாலீ)

மங்களம் பொருந்துமின்ப மணமோகனம்
மனம்-மாறிடாத காதலர்க்கு சுபசோபனம்

(லாலீ லாலீ)

லலிதா பத்மினி: டான்ஸ் பாட்டு

ராகம் : கீர்வாணி — தாளம் - ஏகம்

பல்லவி

ஓரிடந்தனிலே நிலை நில்லாதுலகினிலே
உருண்டோடிடும் பணங்காசெனும்
உருவமான பொருளே

அநுபல்லவி

ஊரும் பேரும் தெரியாதவரை
உயர்ந்தோராக்கிடுமே - அது (உயர்ந்தோர்)
உருண்டோடிடும் பணங்காசெனும்
உருவமான பொருளே.

சரணம்

ராகம் : அமிர்கல்யாண் — தாளம் - ஏகம்

காசு நல்ல காரியம் செய்யாது
கண்மூடித்தூங்கக் கருணை காட்டாது
களவு கொலையுண்டாக்கும்
கவலை மிகவும் சேர்க்கும்
காமுறும் இன்பமும் சொந்தமும்
எல்லாமே நீக்கும் (ஓரிடந்தனிலே.

சரஸா

ராகம் : கர்நாடக தேவகாந்தாரி   தாளம் - ஆதி

பல்லவி

ஆடவருவாயா கண்ணா விளை
யாடவருவாயா கண்ணா என்னோடு (விளை)
அன்போடு என்னைப்பாறாய் கண்ணால்
கண்ணா ஓடி (ஆட)

அனுபல்லவி

ஓடையிலே நீ தான் முன்னாள்
மலர் (ஓடை)
மடவாரோடு விளை
யாடினது போலேயின்னாள் என்னோடு
விளை (ஆட)

சரணம்

பசுவெண்ணை பாலாடை பழவகை
தருவேனே பணியால் உடையால்
அணிபுரிவேனே இசையோடு பாடியும்
இன்பம் செய்வேனே எழில் சேர்நந்த
பாலா கோபாலா என்னோடு (விளை)

மூர்த்தி - அமிர்தம்

ராகம் : ஹரிகாம்போதி   தாளம் - ஆதி

மூர்த்தி :
சிங்காரப்பண்பாடுவேன் - சரஸ (சிங்)
ஜீவசிந்தாமணி உந்தனோடு நானே (சிங்)

அமிர்தம் :
சங்கீதப்பதம் பாடுவேன் - இனிய (சங்)

உங்கள் -

சந்தோஷம் குறையாமல் நானே சுர - (சங்)

மூர்த்தி :

வனிதையுன் அனுராகம்

வாழ்வின் வைபோகம்

மனம் நாடும் தேனோடு பாலாகும்

அமிர்தம் :

இணையாம் தாள இயல்பென

காதலர் இசைவது தான் ஞானபாகம்

மூர்த்தி :

மலர் முகம் தான் கண்டு நானே

நாளும் வண்டெனக்கொண்டாடு

வேன் - உந்தன் (மலர்)

அமிர்தம்

நிலவும் கடல் போலும் ஆனோம் நாமே

மூர்த்தி :

அழகிய மாமயில் அமிர்தம் நீ

அமிர்தம் :

ஆசை முகிலும் நீர்

மூர்த்தி :

ஆதாரம் நீ

அமிர்தம் :

ஆசை முகிலும் நீர்

மூர்த்தி :

ஆதாரம் நீ

அமிர்தம் ·

ஆவி நீர்

மூர்த்தி :

யாவும் நீ

அன்பு தேடும்

இருவரும் :

சிங்காரப்பண்பாடுவோம் - ஜீவ
சங்கீத சுவையோடு நாமே - இனிய
(சிங்கா)

சுகிர்தம்

ராகம் : மாண்டு   தாளம் - திஸ்ரம்

பல்லவி

உலகம் பலவிதம் - இந்த (உல)

இவர் - அதிலேதான் ஒருவிதம் (உல)

அனுபல்லவி

இலைமறைந்த காயைப்போல இருப்பார்
சில பேர்
எல்லாம் தெரிந்த மனுஷன் போல
ஏய்ப்பார் சிலபேர் (உல)

சரணம்

ஒட்டுச்சடை மீசைதாடி உருவங்கள்
சிலதுண்டு - திரு- (உரு)
பட்டை நாமம் தீட்டுகின்ற
பக்திமான்கள் உண்டு - தெய்வ (பக்)
கஷ்டப்பாடு பட்டிடாத காவடிகள்
உண்டு - அன்னக் (காவடிகள்)

காக்கா பிடிச்சு காலங்கடத்தும்
காவாலிகளும் உண்டு - சுத்தக் (காவா)

(உல)

ராகம் : காபி மிக்ஸர் தாளம் - ஆதி

ஒட்டிக்கு ரெட்டியாக வட்டிக்கு
பணம் கொடுத்து ஊரார் முதலைக்
கொள்ளையடிப்பார் இவர் (ஊரா)

அதை
ஊதுபத்தி சாம்பிராணி - சூடம் வாங்கி
எறிப்பார் உண்மையிலே சிலவளிப்பார்
பட்டம் பதவிக் கிறைப்பார் கோயில்
கட்டுதற்கூட சிலவளிப்பார்
இந்த (உல)

ராகம் : மாண்டு தாளம் - திஸ்ரம்

பேதமற்ற காதலென்றும் பிரியமாகப்
பேசுவார் - பெருமையாகப் பேசுவார்
பெண்பிள்ளையை தவிக்க விட்டே
ஓடுவார் சிலர் (பெண்)

நீதியில்லா உலகமிது நேர்மையற்ற
உலகமிது ஜாதிபேத சமயங்களாம்
சஞ்சலங்கள் சூழ்ந்த இந்த (உல)

The Mercantile Press, Mannady, Madras.

விரைவில் வெளிவருகிறது
ஜூபிடரின்
கன்னியின்
காதலி
தயாரிப்பு: ராம்நாத் · சேகர்